திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த மத்திய பாதுகாப்புப் படை பற்றிய மசோதா நிறைவேற்றப்பட்டாலும் தமிழகத்தில் மட்டும்தான் இப்பொழுது "இம்ப்ளிமென்ட்" செய்திருக்கிறார்களா ? அல்லது, அகில இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் இந்தப் படை அமைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழகத்தில் இரண்டு இடங்களில் அமல்படுத்தப்பட்டது பற்றித்தான் விவரம் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் ஒருவேளை அமல்படுத்தப்பட்டிருக்கக் கூடும். அதற்கு ஒன்றும் தடை இல்லை.

அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்டோருக்குச் சலுகைகள்

*247 **வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பதவிகளுக்கு நியமனம் செய்ய நடத்தப்படும் தேர்வுகளில், தகுதியும், திறமையும் உடைய தாழ்த்தப்பட்ட நபர்களுக்குப் பொது ஸ்தானங்களில் வாய்ப்பளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழ்நாடு மாநில சார் பணிகள் விதிகளின் 22 (பி) பொது விதிக்கிணங்க, தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படும் பதவிகளுக்கு அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர், ஆகியோரின் விண்ணப்பங்களும் கருதிப் பார்க்கப்பட வேண்டும். அரிசனங்கள், பழங்குடி மக்கள் அல்லது பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த விண்ணப்பதாரர் ஒருவர் தகுதியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்டால், அதன் காரணமாக அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை எவ்வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது.

தமிழ்நாடு அரசு தயாரித்துள்ள செய்திப்படம்

*248 **வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு செய்தித் துறையினர் தயாரித்துள்ள செய்திப் படம் ஒன்றைத் திரையிட மத்திய சென்சார் போர்டு அண்மையில் தடை விதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) தடை விதிக்கவில்லை. ஆனால், ஒரு செய்தி மலரில் விளக்கவுரையில் இருந்த சொற்றொடர் ஒன்றுக்கும் மற்றொரு செய்தி மலரில் இருந்த காட்சி ஒன்றுக்கும் தணிக்கைக்குழு மறுப்புத் தெரிவித்தது.

திரு. எஸ். கணேசன் : தடை விதிக்கப்படவில்லையென்றாலும், சில காட்சிகள் தவிர்க்கப்பட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தக் காட்சியில் எப்படிப்பட்ட கொள்கையைப்பற்றி வருகிறது என்று சொல்ல இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அதுபற்றிப் பேசுவதற்காக கோட்டையில் ஒரு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் நடைபெற்றது. அது தமிழக அரசு செய்தித் துறைப்

1971 டிசம்பர் 11]

படமாக எடுக்கப்பட்டபோது 48-வது செய்தி மலரில், காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு காலம் கடத்துவது குறித்து ஆராய சென்னை கோட்டையில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றதாகச் செய்தி வந்தது. அதிலே "மத்திய அரசு காலம் கடத்துவது குறித்து ஆராய" என்ற சொற்றொடரை சென்ஸார் அனுமதிக்கவில்லை; அதை வெட்டிவிட்டார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பொதுவாக சமுதாயத்தையும், மற்ற வற்றையும் பாதிக்கக்கூடிய வகையில் இருந்தால் சென்சார் "கட்" செய்வார் கள். ஆனால் நம்முடைய அரசாங்கம் உண்மைகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில், இப்படி உண்மையான செய்திகளைக் கூட கட் செய்து இருக்கி றார்களே, அதை மீண்டும் சேர்ப்பதற்கு அந்த சென்சார் போர்டினிடத்தில் வலியுறுத்தப்பட்டதா, அந்த போர்டு என்ன பதில் சொல்லிற்று என்ற விவரம் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்சார் போர்டிலே அதுபற்றி பேசப்பட்டது. மத்திய அரசின் தொடர்புடைய அலுவலர்களிடமும் அது பற்றித் தெளிவாகக் கூறப்பட்டது. ஆனாலும் அவர்கள் பிடிவாதம் காட்டினர். ஆனால் அந்தப் படம் வெளிவரவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்ட காரணத் தாலும், இந்தப் பிரச்னைக்கு முடிவு காணக் காலதாமதம் ஏற்படும் என்று கருதிய காரணத்தாலும், அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிகளை மக்கள் அறிவது இந்த ஒரு வரி சேர்ப்பதன் காரணமாகத் தடைபடக்கூடும் என்ற காரணத் தாலும், அந்த ஒரு வரியைச் சேர்க்காமலேயே அந்தப்படம் வெளியிடப் பட்டது.

ஆப்காரி சட்டம்

*249 வினா—**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆப்காரி சட்டத்தை அமல் நடத்துவது சம்பந்தமாக எத்தனை டிப்டி-கலெக்டர் பதவிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்டத் துணை ஆட்சியர் தரத்தில் பதினான்கு ஆயுத் தீர்வை உதவி ஆணையாளர் Deputy Collectors பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆப்காரி சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது? அந்தச் சட்டத்தை மாற்றி யமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது ஒரு பரீட்சை கேள்வி போல் இருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் பதில் தரலாம்.

உதகை கலைக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி

*250 வினா—**திரு. கு. அ. பொம்மன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை கலைக்கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டடம் கட்டுவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?